1972 நவம்பர் 13]

Madurai University Buildings

* 271 *Q.*—Thiru S. S. THENNARASU : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the purpose for which the buildings in which the Madurai University was housed formerly are used at present?

மதுரை பல்கலைக் கழக கட்டிடம்

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மதுரை பல்கலைக் கழகத்தின் பழைய கட்டிடம் இப்போது எதற்குப் பயன்படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அஞ்சல் வழி படிப்புத் துறை, பல்கலைக் கழகக் கட்டிடக் கோட்ட அலுவலகம், பல்கலைக்கழக படிப்புக்கூடம், பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு பண்டகசாலை, பிரெஞ்சு, ரஷ்ய, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழித் துறைகள், காந்திய சிந்தனைத் துறை, மாலை நேரக் கல்லூரி, சான்றிதழ் வகுப்புகள் முதலியவை மதுரைப் பல்கலைக் கழகத்தின் பழைய கட்டிடங்களில் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன.

Thiru D. SANTOSHAM : Sir, I know that these buildings were in existence even before the Madurai University came into existence. Obviously, they belong to the Madras University. Have they been duly transferred to the Madurai University because these buildings originally belonged to the Madras University?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்புகள் இல்லை. இந்தக் கட்டடங்கள் தேவைதான் என்கிற காரணத்தினாலும், மேலும், மேலும் பல்வேறு துறைகள் அங்கே வருகிற காரணத்தினாலும் இந்தப் பழைய கட்டடங்கள் தேவைப் படுகின்றன. புதிய பல்கலைக் கழகக் கட்டடங்களில் அறிவியல், கலை இயல், நிர்வாகப் பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன. இவைகளுக்கே இன்னும் பல கட்டடங்கள் கட்ட வேண்டியிருக்கின்றது. இப்போது அங்கே புதிதாக மாலை நேரக் கல்லூரி மட்டுமல்லாமல்,

அஞ்சல் வழி படிப்புச் சொல்லிக் கொடுக்கின்ற முறை மேற் கொள்ளப்பட்டு, அதற்கும் வழி தேடவேண்டியிருக்கிறது. அது தவிர, அண்மையில் "இன்ஸ்டிடியூஷன் ஆப் சோஷியல் சர்விஸஸ்" என்ற நிர்வாகத்தினை பல்கலைக் கழகம் எடுத்துக்கொள்கிற நிலை இருக்கிறது. இதற்குப் போதுமான இடம் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே இடமிருந்தால் வைத்துக் கொள்ளலாம். எனவே அந்தக் கட்டடங்களின் உரிமையை மதுரைப் பல்கலைக் கழகத்தினிடத்தில் வைத்திருப்பதா அல்லது சென்னைப் பல்கலைக் கழகத்தினிடத்தில் வைத்திருப்பதா என்பதைப் பற்றிய விவரம் தெரியவில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு உரிமை ஆக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளலாம்.

திரு. சா. கணேசன் : இந்த மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியான நூலகப் பகுதியைச் சார்ந்த சுப்பராமன் பூங்கா என்ற பகுதியை நம்முடைய மாநில அரசிடம் மதுரை மாநக ராட்சி ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டு அது சம்பந்தமாக ஏதோ சில சங்கடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியானல், அதுபற்றி ஏதாவது தகவல் அமைச்சரிடம் உண்டா? அப்படி யிருந்தால், அந்தச் சங்கடங்களை நீக்குவதற்கு வேண்டிய முயற்சி களை எடுத்துக்கொள்வதற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Admissions to the Medical Colleges

* 272 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that some of the communities belonging to the backward list have not been represented in the admissions to the medical colleges in the State during the last 3 years;

(*b*) if so, the name of such communities; and

(*c*) whether a suitable procedure will be adopted to give equal representation to all the Backward Communities?